- **காவி நிற மற்றும் பச்சை நிறக் கால்த்தடங்கள்:** நாட்டின் பல்சமயச் சூழலைக் கண்முன் நிறுத்துகின்றன.
- **ஊதா நிறக் கால்த்தடங்கள்:** முழுமையில்லாத இந்தக் கால்த்தடங்கள் மாற்றுத் திறனாளிகளைக் குறிக்கின்றன.
- **வானவில் நிறக் கால்த்தடங்கள்:** மூன்றாம் பாலினத்தவரைக் குறிக்கும்.
- **கறுப்பு நிறக் கால்த்தடங்கள்:** விளிம்பு நிலையில் உள்ளவர்களையும் புறந்தள்ளப்பட்ட மக்களையும் முன்நிறுத்துகின்றன.
- **ஏனைய கால்த்தடங்கள்:** மானுட ஏற்றத்திற்காக நாம் இணைந்து பயணிக்க விரும்பும் பல்வேறு மக்கள் இயக்கங்கள், மாற்றுச் சிந்தனையாளர்கள், விலகி நிற்பவர்கள் ஆகியோரை அடையாளப்படுத்துகின்றன.

## உங்களது கேள்விகளையும் பரிந்துரைகளையும் முன்வையுங்கள்

- உலகளாவியத் திருஅவை நிகழ்வான ஆயர் மாமன்றத்திற்காக ஏற்கெனவே உங்கள் கருத்துகளைக் கடந்த மாதங்களில் பதிவுசெய்த அனுபவம் உங்களுக்கு இருக்கிறது. தற்போது நமது மறைமாவட்டச் சூழலை முதன்மையாகக் கொண்டு உங்கள் கேள்விகளையும் பரிந்துரைகளையும் முன்வைக்கும் தளமாக இறைமக்கள் பேரவை அமைந்துள்ளது.
- இறைமக்கள் பேரவையைக் குறித்துக் குடும்பங்கள், அன்பியங்கள், அருள்பணிக்குழுக்கள், திருத்தூதுக் கழகங்கள், நட்பு வட்டங்கள் போன்ற பல்வேறு தளங்களில் கலந்துரையாடுங்கள்!
- இறைமக்கள் பேரவைக்கான உங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் synodkottar2024@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 2024 மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரை நீங்கள் அனுப்பலாம்.
- இறைமக்கள் பேரவையின் நிகழ்வுகளை எளிதில் உடனுக்குடன் அறிந்துகொள்ளும் வகையில் நமது மறைமாவட்ட இணையதளத்தில் இறைமக்கள் பேரவை சிறப்புப் பகுதி உருவாக்கப்பட்டுள்ளது. அதைப் பின்தொடர www.kottardiocese.org என்ற முகவரியில் தேடுங்கள்!


**தொடர்புக்கு**

பணி. பெலிக்ஸ் அலெக்ஸாண்டர் (9487687138)

பணி. எட்மண்ட் (7373526248)

(இறைமக்கள் பேரவை ஒருங்கிணைப்பாளர்கள்,
ஆயர் இல்லம், ஆசாரிப்பள்ளம் சாலை,
நாகர்கோவில் – 629 001)


"நாம் பலராயிருந்தாலும் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் ஒரே உடலாய் இருக்கிறோம்; ஒருவருக்கொருவர் உடனுறுப்புகளாய் இருக்கிறோம்" (உரோ 12:5)

## சிறப்பு இறைவேண்டல்

இறைவா!
இணைந்து பயணிக்கும்
கோட்டாறு திருஅவையாக
எம்மை வாழ அழைப்பவரே!

எம் அருள்வாழ்வைப் புதுப்பிக்க
ஒன்றிணையும் நாங்கள்
இறையாட்சியின் கனவு மெய்ப்பட
சமூக அடக்குமுறைச் சிந்தனைகள் வேரறுத்து
பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் களைந்து
பாலின வேறுபாடு அகற்றி
திருநிலை பொதுநிலை இடைவெளி தகர்த்து
சமத்துவ அறநெறியில் எம்மை வழிநடத்தியருளும்.

காலத்தின் அறிகுறிகளைக் கண்டுணர்ந்து
விளிம்புநிலை மாந்தரின்
எளிய குரலுக்கும் செவிமெடுத்து
பங்கேற்பாலும் பங்களிப்பாலும்
மனித வளங்களை ஒருமுகப்படுத்தி
இறைவார்த்தையின் ஒளியில்
நலமானவற்றைத் தேர்ந்துத் தெளிந்து
மாற்றம் தேடும் திருஅவையாக மிளிரச் செய்யும்.

வார்த்தைக்கு வலுசேர்க்கும் செயல்திட்டங்களால்
நீடித்த வளர்ச்சியை
இலக்காகக் கொண்டு இயங்கிட
எம் இதயங்களைப் பற்றியெரியச் செய்தருளும்.
இயங்க வைக்கும்
தூய ஆவியாரின் உயிராற்றலால்
நாங்கள் அனைவரும் உம் பிள்ளைகள் எனும்
ஒன்றுபட்ட உணர்வோடு
அன்னை மரியாவின் உடனிருப்பால்
இறையாட்சியின் இலட்சிய முதன்மைகளைக் கண்முன் கொண்டு
இயக்கமாகும் திருஅவையாய்
இணைந்து பயணிக்க அருள்தாரும். ஆமென்.

Assisi Offset Press, Ngl., Cell : 7667729591

# கோட்டாறு மறைமாவட்டம்

# இறைமக்கள் பேரவை 2024

"இணைந்து பயணிக்கும்
கோட்டாறு திருஅவையாக"

"இதோ! நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்" (திவெ 21:5)

## இறைமக்கள் பேரவை என்பது

1. இறைமக்கள் ஒன்றாகக் கூடிவந்து
2. தூய ஆவியாரின் வழிகாட்டலில்
3. மனம் திறந்து உரையாடி
4. ஒருவருக்கொருவர் செவிமெடுத்து
5. தேர்ந்துத் தெளிந்து
6. இணைந்து முடிவெடுத்து
7. மறைமாவட்டத்தைப் புதுப்பித்துக் கொள்வதாகும்.

## இறைமக்கள் பேரவையின் தேவை

- இணைந்து பயணிக்க உலகத் திருஅவைக்குத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தொடர்ந்து அழைப்பு விடுக்கிறார்.
- சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டுச் சூழல்கள் மிகவும் மாறிவிட்டன; மாறிக்கொண்டிருக்கின்றன.
- நமது மறைமாவட்டத்தில் 2000–ஆவது ஆண்டில் முதன்முதலாய் இறைமக்கள் பேரவை நடத்தப்பட்டது. ஏறத்தாழ 23 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது மீண்டும் ஓர் இறைமக்கள் பேரவை!
- திருஅவையிலும் பரந்துபட்ட சமூகத்திலும் நாம் இன்னும் அதிகமாகப் பங்கேற்க வேண்டியுள்ளது.
- நமது மறைமாவட்டத்தின் நூற்றாண்டு விழாவை 2030–ஆம் ஆண்டில் எதிர்நோக்கியிருக்கும் நாம் நமது பாதைகளை இன்னும் தெளிவுற அமைக்க விழைகின்றோம்.

## இரு இலக்குகள்

- கோட்டாறு திருஅவையின் அகவாழ்வைப் புதுப்பித்தல்
- திருஅவையிலும் குடிமைச் சமூகத்திலும் நமது சமூக ஈடுபாட்டை வளர்த்தல்

## நான்கு தளங்கள்

1. நமது மறைமாவட்டத்தில் நம்பிக்கை வாழ்வு எவ்வாறு உள்ளது?
2. பல்வேறு நிலைகளில் உறவு மற்றும் உரையாடல் எப்படி இருக்கிறது?
3. பங்கேற்பு அமைப்புகள் மற்றும் நிர்வாக முறை எவ்வாறு இயங்குகின்றன?
4. திருஅவையிலும் குடிமைச் சமூகத்திலும் நமது ஈடுபாடு எந்த அளவுக்கு உள்ளது?

## இறைமக்கள் பேரவையின் பயண நிலைகள்

1. பல்வேறு குழுக்களை மறைமாவட்ட, வட்டார மற்றும் பங்கு அளவில் அமைத்தல் (2023 அக் 31 வரை)
2. தொடக்கவிழாவினை மறைமாவட்ட மற்றும் பங்கு அளவில் கொண்டாடுதல் (2023 நவ 01 & நவ 05)
3. கேள்வித் தொகுப்புப் பாசறை நடத்துதல் (2023 நவ 11 & நவ 12)
4. பயிற்சிக் கையேடு உருவாக்குதல் (2023 டிசம்பர் 10 வரை)
5. மறைமாவட்ட, வட்டார, பங்கு அளவில் பயிற்சிகள் அளித்தல் (2024 ஜனவரி 31 வரை)
6. பங்கு அளவிலும் பல்வேறு தளங்களிலும் மக்களிடம் கருத்து சேகரித்தல் (2024 மார்ச் 31 வரை)
7. கருத்துகளை மறைமாவட்ட அளவில் தொகுத்தல் (2024 ஏப்ரல் 30 வரை)
8. செயல்முறை ஆவணம் வெளியிடல் (2024 ஜூன் 01)
9. மூன்று நாள்கள் இறைமக்கள் பேரவை நிகழ்வை மறைமாவட்ட அளவில் நடத்துதல் (2024 ஜூன் 15,16,17)
10. இறைமக்கள் பேரவை 2024 கொள்கைகள் ஏடு வெளியிடல் (2024 ஆகஸ்டு 15)

## இலச்சினை (Logo) என்ன செய்தியைச் சொல்கிறது?

- **இதயம்:** இறையன்பு மற்றும் மானுட அன்பைக் குறிக்கும்.
- **சிலுவை:** புனித சவேரியாரின் கையில் உள்ள சிலுவை மற்றும் அவர் நம் மறைமாவட்டத்தில் தொடங்கிய நற்செய்தி அறிவிப்பைக் குறிக்கும்.
- **புறா:** புத்துலகக் கனவினை நமக்குள் தந்து வழிநடத்தும் தூய ஆவியாரைக் குறிக்கும்.
- **அன்னை மரியாவின் முகம்:** தொடக்கத் திருஅவையில் போன்று இன்றும் கடவுளின் தாயன்பில் நம்மை இணைத்து, திருஅவையிலும் சமுதாயத்திலும் மகளிர் தம் பங்கினை உணர்த்துகிறது.
- **மீனும் நெற்கதிர்களும்:** நற்கருணையின் சின்னங்கள், அதேவேளையில் நமது மக்கள் இணைந்து வாழ்ந்து உழைக்கும் இரு நிலப்பரப்பைக் குறிக்கும்.
- **கால்த் தடங்கள்:** இணைந்து பயணிக்கும் நம்மைக் குறிக்கும்.
  - **சிவப்பு நிறக் கால்த்தடங்கள்:** நமக்கு முன் செல்லும் இயேசுவின் காலடிகள்.
  - **நீல நிறக் கால்த்தடங்கள்:** பல்வேறு சபையினரும் நாமும் கிறிஸ்தவ ஒன்றிப்புடன் இணைந்து செல்வதை உணர்த்துகின்றன.